**அனுப்புநர்**

முனைவர். C. உஷாராணி, M.Sc., B.Ed., Ph.D.,
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை – **600 006.**

**பெறுநர்**

அனைத்து முதன்மைக் கல்வி
அலுவலர்கள்,
இணை இயக்குநர் (கல்வி)
புதுச்சேரி,

**ந.க.எண்.052449 / பி1 / 2019** **நாள் :11.07.2019**

**ஐயா/அம்மையீர்,**

**பொருள்:** ஜூன் 2019, பத்தாம் வகுப்பு சிறப்புத் துணைப் பொதுத்தேர்வு – தனித்தேர்வர்கள் – மறுகூட்டலுக்கு விண்ணப்பித்தல் – முதன்மைக் கல்வி அலுவலகங்கள் மூலம் விண்ணப்பங்களை ஆன் – லைனில் பதிவு செய்தல் – மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் – தொடர்பாக.

**பார்வை:** இவ்வலுவலகச் செய்திக்குறிப்பு நாள்: 11.07.2019 (இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது)

*****

நடைபெற்ற ஜூன் **2019**, பத்தாம் வகுப்பு சிறப்புத் துணைப் பொதுத்தேர்வெழுதிய தனித்தேர்வர்கள் தங்களது தற்காலிக மதிப்பெண் சான்றிதழ்களை (Provisional Mark Ceritifcates) பதிவிறக்கம் செய்ய மற்றும் மறுகூட்டலுக்கு விண்ணப்பிக்க வேண்டிய நாட்கள் குறித்தான செய்திக் குறிப்பு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

மறுகூட்டலுக்கு விண்ணப்பிக்க விரும்பும் தனித்தேர்வர்கள் **15.07.2019 ( திங்கட் கிழமை) மற்றும் 16.07.2019 ( செவ்வாய் கிழமை)** ஆகிய இரு நாட்களில் உரிய முதன்மைக் கல்வி அலுவலகங்களுக்கு நேரில் சென்று விண்ணப்பிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஒவ்வொரு முதன்மைக் கல்வி அலுவலகங்களுக்கும் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள User ID Password-ஐ பயன்படுத்தியும் கீழ்க்குறிப்பிட்டுள்ள அறிவுரைகளை பின்பற்றியும் மேற்குறிப்பிடுள்ள நாட்களில் விண்ணப்பங்களை ஆன்–லைனில் பதிவேற்றம் செய்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது.

2..

| | |
|---|---|
| 01 | www.tndge.in என்ற இணையதளத்திற்குச் சென்று அதில் வழங்கப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்தினை பதிவிறக்கம் செய்து தேவைப்படும் நகல்களை எடுத்துக்கொள்ள வேண்டும். தனித்தேர்வர்களின் மறுகூட்டல் கோரும் விண்ணப்பங்களை பதிவு செய்தல் வேண்டும். |
| 02 | மாணவர்கள் மதிப்பெண் மறுகூட்டல் கோரி வரும்பொழுது அவரிடம் ஒரு படிவத்தை அளித்து, எந்தெந்த பாடங்களுக்கு மறுகூட்டல் தேவை? என்ற விவரத்தை பூர்த்தி செய்ய அறிவுறுத்தி அப்படிவத்தை பெற்றுக்கொள்ள வேண்டும்.<br><br>**<u>மறுகூட்டல் (Retotal) கட்டணம்</u>**<br><br>**பகுதி–I மொழி – ரூ. 305/–**<br>**பகுதி–II (ஆங்கிலம்) – ரூ. 305/–**<br>**பகுதி–III கணிதம், அறிவியல் மற்றும் சமூக அறிவியல் – ரூ. 205/–**<br>**பகுதி–IV விருப்ப மொழிப்பாடம் – ரூ. 205/–**<br><br>மறுகூட்டலுக்குரிய மேற்கூறப்பட்ட தொகையினை பணமாக பெற்றுக்கொள்ள வேண்டும். |
| 03 | மாணவர்களிடமிருந்து பூர்த்தி செய்த படிவத்தையும், கட்டணத் தொகையினையும் பெற்றவுடன் இணையதளத்தில் அவ்விவரங்களை பதிவேற்றம் செய்தல் வேண்டும். |
| 04 | விண்ணப்பத்தினை ஆன்–லைனில் பதிவு செய்து submit செய்தவுடன் விண்ணப்ப எண், பதிவெண், விண்ணப்பித்த பாடங்கள், செலுத்த வேண்டிய தொகை ஆகியவை குறிப்பிட்ட ஒப்புகைச்சீட்டு (acknowledgement) print ஆகிவரும். அந்த ஒப்புகைச்சீட்டில் இப்பணியில் ஈடுபடுபவரின் கையொப்பம் மற்றும் முதன்மைக் கல்வி அலுவலக முத்திரையிட்டு தனித்தேர்வரிடம் அளிக்க வேண்டும். இந்த ஒப்புகைச்சீட்டினை தனித்தேர்வர் மிக பாதுகாப்பாக வைத்துக்கொள்ள அறிவுறுத்த வேண்டும். ஒப்புகைச்சீட்டில் வழங்கப்பட்டுள்ள விண்ணப்ப எண்ணை (Application Number) பயன்படுத்தியே தேர்வுத்துறையால் பின்னர் அறிவிக்கப்படும் தேதியில் மறுகூட்டல் முடிவுகள் பற்றி அறிய இயலும். |

| | |
|---|---|
| 05 | ஒவ்வொரு நாளும் பணிமுடிந்தவுடன், daily summary report / daily detailed report இவ்விரண்டையும் click செய்தால் அன்றைய தினம் பதிவு செய்த விவரங்கள் தங்களுக்கு கிடைக்கும். இந்த அறிக்கையினை பதிவிறக்கம் செய்துகொண்டு, அன்றைய தினம் பதிவு செய்த விண்ணப்பங்களையும், தனித்தேர்வர்களிடமிருந்து வசூலிக்கப்பட்டத் தொகையினையும் ஒப்பிட்டு சரிபார்த்துக் கொள்ள வேண்டும். |
| 06 | விண்ணப்பிப்பதற்கு இறுதி நாளான **16.07.2019** அன்று மாலை **06.00** மணிக்கு, விண்ணப்பிக்கும் நேரம் முடிவடைந்தவுடன், FINAL SUMMARY REPORT/FINAL DETAILED REPORT என்ற பகுதியினை click செய்தால் தங்கள் அலுவலகத்தின் மூலம் மறுகூட்டலுக்கு விண்ணப்பித்த தனித்தேர்வரின் விவரங்கள், விண்ணப்பித்த பாடங்கள், வசூலிக்கப்பட்ட மொத்த தொகை ஆகிய விவரங்கள் தெரியவரும். அவ்விவரம் பெறப்பட்ட பின், மறுகூட்டலுக்கு விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கையினை தனித்தனியாக பட்டியலிட்டு அப்பட்டியலை இரு நகல்கள் மற்றும் விண்ணப்பக் கட்டணத் தொகையினை“Director of Government Examinations, Chennai-6” என்ற பெயரில் எடுக்கப்பட்ட கேட்பு வரைவோலை (DD) ஆகியவற்றை அரசுத் தேர்வுகள் இயக்கக துணை இயக்குநர் (பொது) பொறுப்பு, திரு.ச.சீனிவாசன் அவர்களின் பெயரிட்ட முகவரிக்கு பதிவஞ்சல் வழியாக **19.07.2019**–க்குள் அனுப்பி வைத்திட வேண்டும். |

**ஒம்/–**
**இயக்குநர்**

**நகல்:**

1. அனைத்து அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்
3. பி3 மற்றும் அ5 பிரிவுகள் (அலுவலகம்) – தொடர் நடவடிக்கைக்காக